

காருண்யா பல்கலைக்கழக துணை வேந்தர் பால்தினகரன், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச புத்தாடைகள் வழங்கியபோது எடுத்தபடம்.

## காருண்யாவில் கிறிஸ்துமஸ் விழா:

# 500 பள்ளி குழந்தைகளுக்கு இலவச புத்தாடை

## பால்தினகரன் வழங்கினார்

கோவை, டிச. 16–

காருண்யா பல்கலைக் கழகத்தில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் 500 பள்ளி குழந்தைகளுக்கு இலவச புத்தாடைகளை பால் தினகரன் வழங்கினார்.

**கிறிஸ்துமஸ் விழா**

கோவையை அடுத்துள்ள காருண்யா பல்கலைக் கழகத்தில் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. விழாவில் சீஷா தொண்டு நிறுவனம் சார்பில் காருண்யா நகரைச் சுற்றியுள்ள கிராமப் புறங்களில் வாழும் 500 பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச புத்தாடைகள் வழங்கப்பட்டது. காருண்யா பல்கலைக்கழக வேந்தர் பால்தினகரன் புத்தாடைகளை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் ஒலி, ஒளி நாடகம் 3 மேடைகளில் நடைபெற்றது. பல்கலைக் கழகத்தை சேர்ந்த 150–க்கும் மேற்பட்ட மாணவ– மாணவிகள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

**ஸ்டெல்லா தினகரன்**

கிறிஸ்துமஸ் விழாவில் ஸ்டெல்லா தினகரன், இவாஞ்சலின் பால்தினகரன், துணை வேந்தர் பால் அப்பாசாமி, பதிவாளர் ஆனிமேரி பெர்னாண்டஸ், பேராசிரியர் பில்லி கிரஹாம், கியோபிளஸ், காட்சின், மக்கள் தொடர்பு அலுவலர் ஜெபசிங், சுரேஷ் சைமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காருண்யா பல்கலைக் கழகத்தையொட்டியுள்ள ஏஞ்சல் கார்டனிலும் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஏஞ்சல் கார்டன் செயலாளர் துரைராஜ், பொருளாளர் செல்வன் ஜெயசிங், மேலாளர் இன்பசேகர் ஆகியோர் செய்திருந்தனர்.

THE HINDU, MONDAY, FEBRUARY 21, 2011

# Old-age care home on Karunya campus




*Chancellor of Karunya University Paul Dhinakaran inaugurating the Seesha old-age care home on the Karunya campus in Coimbatore on Saturday.*

DINAKARAN, FEBRUARY 21, 2011

# காருண்யா பல்கலை.யில் முதியோர் மறுவாழ்வு மையம் திறப்பு

**தொண்டாமுத்தூர், பிப்.20:** கோவை அருகே காருண்யா பல்கலை கழகம் மற்றும் சீஷா தொண்டு நிறுவனம் சார்பில் முதியோர் மறுவாழ்வு மையம் துவக்க விழா நடந்தது. காருண்யா பல்கலை கழக வேந்தரும், சீஷா நிறுவனருமான பால் தினகரன் மறுவாழ்வு மையம் மற்றும் டிஜிஎஸ். தினகரன் நினைவு இணைய தள ரத்த வங்கியை துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், ஏழைகளுக்கு செய்யும் தொண்டு இறைவனுக்கு செய்வதற்கு சமமானது. இது போன்ற மறுவாழ்வு மையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடங்கப்படும், என்றார். மேலும் மறுவாழ்வு மையத்தில் தங்கும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 20 பெண்களுக்கு பொருட்கள், 5 விதவை பெண்களுக்கு பென்சன் தொகை மற்றும் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கினார். விழாவில் சீஷா திட்ட இயக்குநர் ஜெயக்குமார் டேனியல், காருண்யா பல்கலை துணைவேந்தர் பால் அப்பாசாமி, பதிவாளர் ஆனி மேரி பெர்னாண்ட்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**கோவை அருகே காருண்யா பல்கலை கழகம் மற்றும் சீஷா தொண்டு நிறுவனம் சார்பில் முதியோர் மறுவாழ்வு மையத்தை பல்கலை. வேந்தர் பால் தினகரன் திறந்து வைத்தார்.**

தினமலர்
Sep 06 , 2010

# ஏழை, எளிய மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் விழா

**சென்னை**

கிறிஸ்தவ மத போதகரும், கோவை காருண்யா பல்கலைக் கழக வேந்தருமான பால் தினகரன் பிறந்த நாளை ஒட்டி, 5,000 ஏழை மாணவ, மாணவியருக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிறிஸ்தவ மத போதகரும், கோவை காருண்யா பல்கலை கழக வேந்தருமான பால் தினகரன், சீசா என்ற சமுதாய சேவை அமைப்பை நடத்தி வருகிறார்.

அதன்மூலம் பின்தாங்கிய பகுதியில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு தனி பயிற்சி வகுப்புகள், ஏழை விதவைகளுக்கு உதவித் தொகை, ஆதரவற்ற மாணவர்களுக்கு கல்வி தொகை, சிறுதொழில் பயிற்சி, இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் ஆகியவை வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பால் தினகரனின் பிறந்தநாள் நிகழ்ச்சி, சென்னை சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சியில், மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் மூன்று சக்கர சைக்கிள்களை பால்தினகரன் வழங்கினார்.

டேனியல் ஜெயக்குமார் வரவேற்றார். மகேந்திரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் நிறுவனத் தலைவர் சுரேஷ், சென்னையிலுள்ள கனடா நாட்டின் தூதர் ஷான் வெடிக் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கு பெற்றனர்.

ஸ்டான்லி ஜெபாஸ்டின், டேவிட் இ ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


DINAMALAR

'சீஷா' சேவை மையம் சார்பில் நடந்த விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள்களை, கோவை, காருண்யா பல்கலை துணைவேந்தர் பால் தினகரன் வழங்கினார். அருகில், கனடா தூதர் ஷான் வெடிக், மகேந்திரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் நிறுவன தலைவர் சுரேஷ்.